[2005 பிப்ரவரி 7

52—

தொடக்கப் பள்ளி

***33971—திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி பகுதியில் தொடக்கப் பள்ளி ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம், மாண்புமிகு கல்வி மற்றும் வணிக வரித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியத்தில் உள்ள மேலக்கள்ளக்கிரியிலிருந்து 1 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள கீழக்கள்ளக்கிரியில் ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி இயங்கி வருவதால் மேலக்கள்ளக்கிரியில் ஆரம்பப் பள்ளி தொடங்க தற்போது வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி கிராமத்தில் 500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். 70-க்கும் மேற்பட்ட பள்ளிக் குழந்தைகள் 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள கீழ்க்குடி கிராமத்திற்குச் சென்று கல்வி பயின்று வருகிறார்கள். எனவே, அரசு மறுபரிசீலனை செய்து மேலக்கள்ளக்கிரி கிராமத்தில் தொடக்கப் பள்ளி நிறுவ முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘அனைவருக்கும் கல்வி’ திட்டத்தின்கீழ், ஐந்து வயது நிரம்பிய குழந்தைகள் எளிதாக நடந்து சென்று படிப்பதற்கு வசதியாக 300 மக்கள்தொகையும், ஒரு கிலோ மீட்டர் சுற்றளவும் கொண்ட குடியிருப்புகள் உள்ள அனைத்துப் பகுதிகளிலும் தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்க அனுமதிக்கப்பட்டுள்ளன. அதன்படி சென்ற ஆண்டிலே தமிழகத்தில் இருக்கின்ற அனைத்துக் கிராமங்களிலும் ஆரம்பப் பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. அதன்படி அருப்புக்கோட்டை தொகுதி, திருச்சுழி ஒன்றியம், மேலக்கள்ளக்கிரி என்ற கிராமத்தின் மக்கள்தொகை

2005 பிப்ரவரி 7]

300-க்கும் குறைவாக உள்ளது. கீழக்கள்ளக்கிரி என்ற இடத்தில் ஓர் ஊராட்சி ஒன்றியப் பள்ளி தற்போது இயங்கி வருகிறது. இப்பள்ளிக்கும் மேலக்கள்ளக்கிரிக்கும் இடையே உள்ள தூரம் ஒரு கிலோ மீட்டர் ஆகும். எனவே, மேலக்கள்ளக்கிரியிலிருந்து ஒரு கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கீழக்கள்ளக்கிரியில் ஒரு பள்ளி இயங்கி வருவதால், மேலக்கள்ளக்கிரியில் ஓர் ஆரம்பப் பள்ளி தொடங்க தற்போது வாய்ப்பு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 53, திரு. கா.தி. இளையகண்ணு, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.*

53—

பால் குளிரூட்டும் நிலையம்

***53614—திரு. கா.தி. இளையகண்ணு:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன், பால் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) ஏற்காடு தொகுதி, வாழப்பாடியில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் தற்போது இல்லை.*

திரு. கா.தி. இளையகண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்காடு தொகுதி, வாழப்பாடி, தாலுகா தலைமையிடமாக உள்ளது. வாழப்பாடி தாலுகா பகுதியில் சுமார் 30,000 லிட்டர் பால் உற்பத்தி செய்யப்பட்டு, சேலம் குளிரூட்டும் நிலையத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது. எனவே, இதனை மறுபரிசீலனை செய்து மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வாழப்பாடியில் பால் குளிரூட்டும் நிலையம் அடுத்த ஆண்டாவது அமைக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*